12.08.2024
OS. No. 97/2023

**வா.சா.1 – வை. சண்முகம்**

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

**<u>குறுக்கு விசாரணை :–</u>**

நான் பிராதில் குறிப்பிட்டுள்ள அருள்மிகு. அங்காயிஅம்மன் பதிவு கோவில் என்பது எங்கள் குடும்பத்திற்கு மட்டும் பாத்தியப்பட்டதாகும். ஒரு சமூகத்திற்கு பாத்தியப்பட்டது கிடையாது. அங்காயிஅம்மன் கோவிலில் சுமார் 300 குடும்பங்கள் பூஜை மற்றும் வழிபாடு செய்து வருவார்கள் என்றால் இல்லை. நாங்கள் பூஜை செய்யும் போது வந்து சாமி கும்பிடுவார்கள். வாதி கோவில் எங்கள் குடும்பத்திற்கு மட்டும் பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தீர்ப்புரை இருக்கிறது. இந்த கோவிலில் உண்டியல் கிடையாது. இந்த கோவிலை நிர்வாகம் செய்வதற்கு இந்து சமய அறநிலைத்துறையில் இருந்து எந்த ஒரு உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை. நான் தாக்கல் செய்துள்ள வரி ரசீதுகள் அனைத்தும் அங்காயி அம்மன் கோவில் பெயரில் உள்ளவை என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள தீர்ப்புரைகளின் தீர்ப்பணைகளின் நகல்களை (Decree ) தாக்கல் செய்யவில்லை. அந்த தீர்ப்பாணைகளைப் பார்வையிட்டால் தான் சொத்து விபரம் மற்றும் நீளம், அகலம் மற்றும் நான்கெல்லைகள் தெரியவரும் என்றால் இந்து சமய அறநிலையத்துறையில் இருந்து பக்கத்து சொத்துக்களையும் சேர்த்து எனது தகப்பனார் மீது அந்த வழக்கை போட்டார்கள். அந்த தீர்ப்புரையில்

கண்டுள்ள சொத்து தாவா சொத்து கிடையாது. சாட்சி தற்போது தானாக முன்வந்து அந்த தீர்ப்புரையில் கண்ட சொத்தில் ஒரு பகுதிதான் தாவாச் சொத்து என்று கூறுகிறார். வாதிதரப்பு சான்றாவணம் 1 மற்றும் 2-ல் எந்தச் சொத்து விபரத்திற்கு எவ்வளவு விஸ்தீரணத்திற்கு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்பது தெரியாது என்றால் அசல் வழக்கு எண். 58/1977-ல் எனது தகப்பனார் தாவாச் சொத்து விபரத்தை கூறியிருக்கிறார். அதில் நான்கு அளவுகளும் சொல்லப்பட்டிருக்கிறது. மதுரை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணையில் பிரதிவாதியை தரப்பினராகச் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அது எந்த விதத்திலும் பிரதிவாதியைக் கட்டுப்படுத்தாது என்றால் முந்தைய தீர்ப்பை வைத்துத் தான் நீதிப்பேராணை தாக்கல் செய்தோம். நீதிப்பேராணை தாக்கல் செய்த போது மாவட்ட ஆட்சியர், மாநகராட்சி ஆணையர் மற்றும் வட்டாட்சியரை தரப்பினராகச் சேர்த்து பட்டா வழங்கக் கேட்டிருந்தேன் என்றால் சரிதான். திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டாட்சியர் பிறப்பித்த வாதி தரப்பு சான்றாவணம் 8 உத்தரவில் தாவாச் சொத்து மொத்த விஸ்தீரணத்தில் ஒரு பகுதியில் உள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறார் என்றால் சரிதான். மொத்த சொத்து ஒரு ஏக்கர் ஒரு சென்ட் ஆகும். திருச்சிராப்பள்ளி மேற்கு வட்டாட்சியர் பிறப்பித்த வாதி தரப்பு சான்றாவணம் 8 உத்தரவில் எந்தப் பகுதி என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றும், நான் தாக்கல் செய்த பிராதிலும் அதை குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். அங்காயிஅம்மன் கோவில் மட்டும் நீளம் மற்றும் அகல அளவுகள் எனக்குத் தெரியுமா

web copy

என்றால் 30 அடி அகலம் மற்றும் நீளம் 60 முதல் 70 அடி இருக்கும். நான் சிறிய பகுதியில் அமைந்திருக்கும் கோவிலைப் பொறுத்து வழக்கை தாக்கல் செய்துவிட்டு மொத்த இடமான 11,774 சதுர அடி இடத்தையும் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்து வருகிறீர்கள் என்றால் சரியல்ல. அங்கே இருக்கும் வாடகை தாரர்கள்அனைவரும் செல்லாண்டியம்மன் கோவிலுக்குத்தான் வாடகை செலுத்தி வருகிறார்களா என்றால் மொத்தம் அதில் 7 வீடுகளும், 4 கடைகளும் உள்ளது. அதில் 3 முதல் 4 கடைகளுக்கு அருள்மிகு செல்லாண்டியம்மன் கோவில் செயல்அலுவலரிடம் வாடகை செலுத்தி வருகிறார்கள். வீடுகளில் இருப்பவர்கள் எங்களிடம் வாடகை கொடுக்கிறார்கள். அவர்களுக்கு நான் வாடகை ரசீது வழங்கி வருகிறேன். அந்த ஆவணங்களை கேட்டால் தாக்கல் செய்ய முடியும்.

(குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

Adobe